முருகப்பெருமான் துணை

**மகான் சூரிய பகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**21.06.2021**, திங்கட்கிழமை

1. வள்ளலாய் வாழும் ஞானியே
வரம்பெற்று வந்த தவசியே
இல்லாமை போக்கி கலியில்
ஏழ்மை பசிபிணிவிரட்டும் யோகியே
2. யோகியே ஆறுமுக அரங்கனே
உலகத்தில் உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ மிதுனதிங்கள்
அறிவிக்க சப்தமதிகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 7ம் நாள், 21.06.2021, திங்கட்கிழமை)
3. வாரமதில் யோகபிரசன்ன ஆசியை
வழங்குவேன் ஆழ்வார்களை தொடர்ந்து
கிரகங்களின் நாயகர்களுள் சூரியபகவானும்
கூறிடுவேன் உலகநலம் வேண்டி
4. வேண்டியே அரங்கன் காட்டும்
வேத நெறிகளை ஏற்று
தொண்டர்களாகி ஞானியர் வழி
தொடர்ந்து மக்கள் வருக
5. வருகவே கதிர் வாரம் தோறும்
வணங்கி அரங்க மகானிடம்
திருவடி தீட்சை பெற்று வருக
தெய்வபலமாக சூரியபகவான் என்
6. என்சக்தியும் ஆசியும் கிட்டி
இடர்களின்றி எதிர்ப்பு சக்தியும்
நன்மைதரும் ஆக்க சக்தியாக பரவி
ஞானவான்கள் தன்மை அடைவர்
7. அடையவே அறமோடு ஞானமாக
ஆன்மீகம் வளர்க்கும் அரங்கனை
தடையின்றி ஞான குருவாக
தரணியோர் ஏற்க மாற்றம்
8. மாற்றம் உலகம் அடையும்
மழைவளம் புவிவளம் கூடி
ஆற்றல்பட ஞான பூசையால்
அன்னதான சேவை பலத்தால்
9. பலத்தால் பலமான ஞானபூமியாக
பண்பான மக்கள் படைகொண்ட
உலகமாக மாறி இனிதே
உண்மையான ஞானஆட்சி மலரும்

10. மலரும் ஞானிகள் துணைபட
மண்ணுலகம் ஞான உலகமாக
வளரும் சக்தி மிகுந்த நல்
வளர்ச்சிமிக்க மக்கள் படைகள்

11. படைகள் அரங்கன் தயவுபட
பாதுகாப்பான உலகை படைத்து
சோடையின்றி தலை நிமிரும்
செப்பிய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—